# தமிழ்ச் சிட்டு

## வாழ்நாட் பணியால் புகழுறுவாய்!

சின்னஞ் சிறிய பணிசெய்து
   சிறுமை பேசி நகையாடிப்
பொன்னிற் சிறந்த காலத்தைப்
   போக்கி யொழிக்க நினையாதே!
மன்னும் புகழ்சேர் பெரும்பணியை
   மக்கட் கெல்லாம் பயன்விளைக்கும்
நன்மைப் பணியைச் செய்தற்கு
   நாட்டங் கொள்வாய் இளந்தோழா!

ஆழ்கடல் முத்துக் குளிப்பதுபோல்
   ஆர்வம் மிக்க தனித்துறையில்
சூழ்ந்து நினைத்தே ஒன்றினிலே
   தோய்ந்தும் ஆய்ந்தும் தக்கபடி
தாழ்வில் லாத முயற்சியுடன்
   தடைகளை வென்று நிறைவேற்றி
வாழ்நாட் பணியால் புகழுறுவாய்
   வையம் போற்ற நிலைபெறுவாய்!

—இறை;

குரல் : 22
இசை : 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை :
உருபா : 1-50

# பத்தாண்டிற்குமுன் இதே காலத்தில்...

*தமிழ்ச் சிட்டுகளே...!*

உங்களில் பலருக்கு நினைவில்லாமல் இருக்கலாம்.

இன்றைக்குச் சரியாகப் பத்தாண்டிற்கு முன்னர் நாம் வாழ்கிற தமிழ்நாட்டின் தெற்கே உள்ள இலங்கையில்தான் அப்படி நடந்தது.

இலங்கையின் வடக்கே உள்ள யாழ்ப்பாண நகரமே தீப்பற்றி எரிந்தது.

யாழ் நகரத்துத் தெருக்களில் எல்லாம் சிங்களப் படையினர் மட்டுமே நடந்தனர்.

கண்களில் கண்ட மக்களையெல்லாம் சுட்டுப் பொசுக்கினர்.

ஆண்களையெல்லாம் இழுத்துச் சென்று ஆண் உறுப்புகளை அறுத்து எரிந்தனர்.

பெண்களெல்லாம் மாந்த உணர்வில்லாமல் சீரழிக்கப்பட்டனர்.

ஆட்டுக்கறி விற்பனை செய்கிற கடைகளில் 'தமிழனின் கறி'—கிடைக்கும் என பெயர்ப்பலகை மாட்டினர்.

தொடர்வண்டி நிலையம், பேருந்து நிலையம் இவையாவும் சிங்களப் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

பழைய நூல்களின் களஞ்சியமாய் விளங்கிய அருந்தமிழ்ப் பெட்டகமான யாழ்ப்பாண நூலகம் தீ வைத்துக் கொளுத்தப் பெற்றது.

கோயில்கள், கிருத்துவ வழிபாட்டிடங்கள், இசுலாமியப் பள்ளிகள் அனைத்தும் தகர்த்தெரியப்பட்டன.

மருத்துவமனைகளும், தெருக்கடைகளும் இடித்துத் தள்ளப்பெற்றன.

—ஆம் அன்றைய இந்த நிகழ்வுகள் இன்றைக்கு வரலாறாய் மாறி-விட்டன.

'தமிழில் கல்வி பயில முடியவில்லை, தமிழராய் வாழமுடியவில்லை' —என்று யாழ் தமிழர்கள் கேட்டதாலேயே இப்படியெல்லாம் சிங்களப்படை வெறியாட்டம் ஆடியது.

ஆனால் அத்தகைய வரலாற்றைப் படிப்பதற்குக் கூட இங்கு நமக்கு வழியில்லை.

நாம் தமிழிலும் படிக்க முடிவதில்லை— நம் தமிழ்நாட்டில்.

இத்தகைய நிகழ்வுகளை நம் தாய் தந்தையரிடமிருந்தேனும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வரலாறு என்பதுதான் மாந்த குலத்தை நோயில்லாமல் வாழ வைப்பது.

உடலுக்கு நோய் வந்து விட்டால் நேற்றைக்கு என்ன சாப்பிட்டோம், என்ன செய்தோம், மழையில் நனைந்தோமா—என்று நேற்றைய வரலாற்றைப் பார்த்தால்தான் இன்றைய நோய்க்குக் காரணம் நமக்கு விளங்குகிறது.

அது போல—ஒரு மக்கள் கூட்டத்தின் கடந்த கால வரலாறுகளின் தவறுகளைத் திருத்துவதே இன்றைய மக்களினத்தை நோயில்லாமல் காக்கும். எனவே—இளைஞர்களே—இந்த இளமைக் காலம் திரும்பாதது. இளமையில் கற்பதே பசுமரத்தாணியாய் நிற்கும்.

எனவே—நம் இளமை நாள்களில், நம் வரலாற்றை நாம் பயில வேண்டாமா? பயிலுவோம்—'நம்' நோய் நீக்குவோம்! O

தமிழ்ச்சிட்டு
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2024) மடங்கல் (ஆகத்-செப் 93) [இசை-6

# சிறைக்கு அஞ்சாதே!

'சிறை' என்பதற்கு எல்லை என்பது பொருள். ஒருவரை எல்லைப்படுத்தி, கட்டுப்படுத்தி வைத்திருப்பதே சிறை. மக்கள் வரலாற்றில் அரசு அமைப்பு தொடங்குவதற்கு முன்பிருந்தே சிறை வைப்பு முறை தொடங்கியிருத்தல் வேண்டும் தமிழக வரலாற்றைப் பொறுத்த அளவில் சிறைவைப்பு முறை தொல் பழங்காலந் தொட்டே வழக்கில் இருந்து வருகிறது. திருக்குறளில் **'சிறை காக்கும் காப்பு'** (97) என்னும் தொடர் வருகிறது.

அரசு அமைப்பு தோன்றிய பின்னர் மக்களில் தண்டிக்கப்பட வேண்டியவர்களையும், பகைவர்களையும், வேண்டாதவர்களையும் சிறையில் அடைத்து வைக்கும் முறை கையாளப்பட்டது, ஒருவரை மக்களிடையே, இயங்க விடாமல் தடுப்பதே சிறை.

சிறை வைப்பதை உலக அரசமைப்புகள் அனைத்தும் பின்பற்றுகின்றன. சிறைவைப்பது குற்றங்கள் நிகழாமல தடுக்கும் ஓர் உத்தியாக அரசுகள கடைப்பிடிக்கின்றன; கடைப்பிடிக்க வேண்டும் ஆனால் இந்த உத்தியை அரசுகள் அதுவும் இன்றைய உலக அரசுகள் தவறாக, மிகவும் தவறாகக் கடைப் பிடிக்கின்றன. தங்களுக்கு வேண்டாதவர்களை எல்லாம சிறைவைக்கின்றனர். அறிவியல் வளர்ச்சிப் பெற்ற இந்தக் காலத்தில் உரிமையியல்

விளங்கித் தோன்றும் இந்தக் காலத்தில், வேண்டாதவர்கள் என்பதற்காகச் சிறைவைப்பது தவறானது; கொடுமையானது. குற்றவியலை உரிமையியலுக்குத் தடையாக, அரணாகப் பயன்படுத்துவது மிக மிகத் தவறான நடைமுறையாகும், அறவியலுக்கு மாறானதாகும்.

இருப்பினும், இப்பொழுது இயங்கி வருகிற அரசுகள், இந்தியாவில் மட்டுமன்று, உலக நாடுகளில பெரும்பாலானவற்றில் – உள்ள அரசுகள்—மக்கள் உரிமைத் தேவைகளை மதிப்பதில்லை. அவ்வாறு உரிமை கேட்கும் தனியார்களையும் இயக்கங்களையும அடக்கி ஒடுக்கவே முயலுகின்றன. அவ்வாறு அடக்கி ஒடுக்கும் முயற்சிகளை மட்டும் செய்யாமல், அவர்களைப் பல வகையிலும் கொடுமைப்படுத்தவும் உறுப்புச்சிதைவு(சித்திரவதை)செய்யவும்கூட அவை தயங்குவதில்லை. சில அரசுகள் அத்தகைய பலரைச் சுட்டுக் கொல்லவும் செய்கின்றன. என்ன செய்வது?

உலக ஒன்றிய நாடுகள் பேரவை (ஐ. நா. அவை) அரசுகளின் தவறான நடைமுறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய உரிமையைக் கையில் வைத்துள்ளது. இருப்பினும் உலக நாடுகள் அப்பேரவையைக் கண்டுக் கொள்வதில்லை. அதுவும் அவற்றின் மாந்த உரிமைகளுக்கு மாறான நடவடிக்கைகளைக் கண்டித்து அறிக்கை விடுவதோடு தன் கடமையை முடித்துக் கொள்கிறது.

எனவே, பலநாடுகளிலும் உரிமை முழக்கம் எழுப்புவர்கள் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளாகிப் பல ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டு வாடுகிறார்கள். பற்பல கொடுமைகளுக்கும் உறுப்புச் சிதைவுகளுக்கும் ஆளாகிறார்கள். வெறும் பேச்சுப் பேசி மக்களை நம்ப வைத்து ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் வெளியே உலாவந்து கொண்டிருக்கிறார்கள். கொள்கை தழுவி ஏதாவது செயலில் ஈடுபட முயல்பவர்களோ உடனே சிறை பிடிக்கப் பெற்று, பலவாறான கொடுமைகளுக்கு ஆளாகி ஆண்டுக் கணக்கில் உள்ளே இருந்து நலிந்துக் கொண்டிருக்கிறார்கள், இந் நடைமுறை உரிமைப் போராளிகளாக உள்ளவர்களைப் பொறுத்தமட்டில் உலக நாடுகள் அனைத்திலும் கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்தியாவைப் பொறுத்த அளவிலும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களை பொறுத்த அளவிலும், 'தேசியப் பாதுகாப்புச் சட்டம், 'தடா'ச் சட்டம் 'மிசாச் சட்டம்' போலும் கொடுமையான கறுப்புச் சட்டங்கள் தங்கு தடையின்றித் தாராளமாக, மக்கள் உரிமைக்காகப் பாடுபடுபவர்கள்மீது பாய்ச்சப்படுகின்றன. இதனால், மக்கள் நலம் கருதிப் பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் அரண்டு மருண்டு தங்கள் செயற்பாடுகளில் முனைவு கொள்ளவும் அச்சப்படுகிறார்கள்; எப்பொழுது—எந்த நேரத்தில் காவலர்கள் தங்களைத் தேடி வருவார்களோ, என்னென்ன கொடுமைகளுக்கு

ஆளாக்குபவர்களோ என்று வெருக் வெருக் என்று அஞ்சிக் கொண்டே இருக்கிறார்கள்.

அதுவும் கடந்த தமிழக ஆட்சி வெறும் அடக்குமுறை ஆட்சி-யாகவே மாறிவிட்டது. மக்களை அடக்கி ஒடுக்குவதற்காகவே ஆட்சி என்னும் அளவில் இயங்கி வருகிறது. காவல் துறை கொலைகாரர்களாகவே மாறிவிட்டார்கள்? அடிப்பது, உதைப்பது, கால் கைகளை முறிப்பது என்பது காவலர்களுக்கு இயல்பும் அன்றாட நடைகளாகவும் மாறிவிட்டன. அவர்கள் போடுகின்ற வழக்குகளில் நூற்றுக்குத் தொண்ணூறு வழக்குகள் பொய் வழக்குகளாகவும், சுவடிக்கப்பட்ட வழக்குகளாகவும், அரட்டி மிரட்டி வாய்மூலம் வாங்கிய வழக்குகளாகவுமே இருக்கின்றன. இவை பற்றியெல்லாம் பொதுமக்களுக்கோ அரசுக் கட்டிலில் உள்ளவர்களுக்கோ கூட தெரியாத அளவில் காவல்துறையின் செயற்பாடுகள் உள்ளன.

இவ்வாறான கொடுமையான, கொடுங்கோன்மையான ஆட்சியாக நம் தமிழக ஆட்சி இருந்தாலும், நம் உரிமைகளைக் கேட்பதற்கும் அவற்றுக்காகப் போராடுவதற்கும் நாம் தயங்கக் கூடாது; அஞ்சக் கூடாது. போராட்ட உணர்வு அண்டை அயல் மாநிலங்களுக்கு உள்ளது போல் நம் தமிழின மக்களிடம் இல்லை; கருநாடக, ஆந்திர, மலையாள மக்களுக்கு உள்ளதைப் போலும் போராட்ட உணர்வு நம்மிடத்திலும் இருத்தல் வேண்டும். நம்-மிடம் அத்தகைய உணர்வு இல்லாமல் இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

சாதிப்பிரிவுகளும், மதப்பிரிவுகளும் நம் தமிழினத்தைத் தாக்கியது போல் இந்தியாவில் உள்ள வேறு எந்த மொழியினத்-தையும் தாக்கி விடவில்லை. இரண்டாவது, தமிழகத்தில் உள்ள பார்ப்பனர்களால் நம் இனிய தமிழ்மொழிக்கும், கலை பண்பாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்களைப் போல் வேறு எந்த இனத்-திற்கும் ஏற்பட்டுவிடவில்லை, பிற மொழியினங்களெல்லாம் பார்ப்பனியத் தாக்கங்களை ஏற்றுக் கொண்ட இனங்களே; சமசுக்கிருதம் இல்லையானால் தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ வேறு பிற மொழிகளோ இயங்கா. ஆனால் சமசுக்-கிருதம் இல்லையானால் நம் தமிழ்மொழி இயக்கத்திற்குப் பழுதோ, தாழ்ச்சியோ, மெலிவோ ஏற்படாது. மாறாக, நம் தமிழ் அதன் சிறு தாக்கமுமின்றித் தனித்தியங்கிச் செழுமை பெற்று வளரும் தன்மையும் தனிமைச் சிறப்பும் உடையது.

அதே, பார்ப்பனியம் இல்லாமற் போகுமானால் பிற மொழியினங்களின் கலைகளும் பண்பாடுகளும் இல்லாமற் போய்விடும். ஆனால் நம் இனம் அப் பார்ப்பனியக் கலப்பில்லாமற் போமாயின் நம் தனித்தன்மையுள்ள கலைகளும் பண்பாடுகளும் எந்த வகை-யான தங்கு தடையுமின்றிச் செழித்து வளரக் கூடியன.

பார்ப்பனியத்தால் பிற இனங்களும் அவற்றின் மொழிகளும் நன்கு வளர்ச்சியும் வாழ்வும் பெற்றன. ஆனால் நம் தமிழினமும்

நம் தமிழ்மொழியும், பார்ப்பனியத்தால் தளர்ச்சியும் தாழ்வும் பெற்றன. எனவேதான் பார்ப்பனியத்தை நாம் அனைத்து துறைகளிலும் தவிர்க்க முயற்சி செய்கிறோம். இந்தத் தவிர்ப்பு முயற்சி கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நடந்து வருகின்றன.

ஆனாலும் நாம் அவற்றிலிருந்து விடுபட இயலாமல் போராடியே வந்துகொண்டுள்ளோம். இன்னும் நம் கொள்கையிலும் குறிக்கோளிலும் வெற்றி பெற்றுவிடவில்லை. இன்னும் நாம் அவற்றுக்காகப் போராடவேண்டியுள்ளது. இவ்வாறு நாம் எத்தனைக் காலத்திற்கு போராட வேண்டியிருக்குமோ, தெரியவில்லை. எனவே, நம் இளைஞர்கள் இப்போராட்டக் கோட்பாடுகளில் கவனம் செலுத்தவேண்டும். இதில் பெரியவர்களையோ தலைவர்களையோ நம்பிப்பயனில்லை. அவர்கள் வெறும்பேச்சாளர்களே, அல்லது ஆட்சிக் கட்டிலுக்குப் போராடும் பதவியாளர்களே—பதவி கிடைத்தால் பணம் சேர்க்க விரும்பும் பேராசைக் காரர்களே! இதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழ் மொழியையும் இனத்தையும் நாட்டையும் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு இப்பொழுது இளைஞர்கள் கைகளிலேயே உள்ளது. இளைஞர்களே தன்மானமும் இனமானமும் மிக்கவர்கள். ஆனால், அவர்களுக்குத் தம் இழப்பீடுகளின் மதிப்பீடுகள் தெரிவதில்லை. அவர்களின் உணர்வு இன்னும் நம் இனப் போராட்டங்களில் திரும்பவில்லை. அவர்களின் எண்ணங்களும் உணர்வுகளும் இப் போராட்டப் பாதையில் திரும்பிவிடக்கூடாது என்பது நம்மை ஆளுகின்ற பார்ப்பனீய முதலாளிய அரசுகளின் கருத்தாக உள்ளது. அவர்களின் நோக்கம் இப் போராட்ட வடிவங்களில் திருப்பப் பெற்றால், அவர்களின் புரட்சி வேகத்தைக் கட்டுப்படுத்துவது கடினம் என்று அரசு நினைக்கிறது. எனவே, அவர்களின் எண்ணங்களை இதில் திரும்பி விடாதபடி மிக எச்சரிக்கையாக அரசு, அவர்களை விளையாட்டுகளிலும், களியாட்டுகளிலும் ஈடுபாடு கொள்ளும்படி தன் கைகளில் உள்ள வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் செய்தித்தாள்கள் முதலியவற்றைக் கொண்டு கடும் முயற்சி செய்கிறது. அவற்றில் பொழுதுபோக்குச் செய்திகளையும் பாலியல் உணர்வுகள் துளும்பும் படப் பாடல் காட்சிகளையும் மிகவும் ஒலி, ஒளிபரப்பாகும்படி திட்டமிட்டுச் செயல்படுகிறது. இனி இவற்றுடனும், இவற்றுக்கு மேலாகவும் மத, மூட நம்பிக்கைகளையும் அவை தொடர்பான நிகழ்ச்சிகளையும் மிகுதியும் இடம்பெறச் செய்கிறது. இவற்றால் இளைஞர்களின் உள்ளம் திசை திருப்பப்படுகிறது. அவர்கள் அவற்றை மிக விரும்பிச் சுவைத்துப் பார்க்கின்றனர். அவற்றிலேயே மிகப் பலர் ஆழ்ந்து இணைந்து விடுகின்றனர். தங்கள் கல்வியின் மேல்கூட அவர்களுக்கு நாட்டம் மிகாதபடி அப் பொழுதுபோக்குப் புன்மை நிகழ்ச்சிகளும், விளையாட்டு வேடிக்கைகளும் மத மூட நம்பிக்கைகளும் அவர்களை ஆட்கொண்டு விடுகின்றன.

எனவே, இளைஞர்கள் இவற்றில் பதிந்துள்ள தங்களின் மனங்களையும் அறிவுணர்வுகளையும் மீட்டெடுத்துக் கொள்ள

வேண்டியவர்களாக உள்ளனர். அவர்கள் மிக மிக விழிப்பாக இருந்து அவற்றைப் புறக்கணித்துவிடும் மனத் துணிவுபெற வேண்டும. தங்கள் நாட்டங்கள் முழுவதையும், தங்களின் மொழி, இன, நாட்டு முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபடுத்திக் கொள்ளு-தல் வேண்டும். இல்லெனில் அடுத்தடுத்து வரும் தலைமுறைகளின் நிலைமை மிகவும் கீழானதாகப் போய்விடும். பிறகு என்றென்றும் பார்ப்பனீயத்திற்கும் முதலாளியத்திற்கும் அடிமைப்பட்டே கிடக்கவேண்டியிருக்கும். அதன்பின் கைநழுவிப் போன தங்கள் மொழி, இன, நாட்டு நிலைகளை மீண்டும மீட்டெடுத்துக் கொள்-வதென்பது இயலாததாகி விடும்.

இவற்றையெல்லாம் இளைஞர்கள் தங்கள் நெஞ்சுகளில் நிலை-யாகப் பதித்துக் கொண்டு, போராட்டங்களில் குதிப்பதற்குத் தங்களை அணியப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

போராட்டம் முதலில் மக்களிடம் சென்று தங்களின் கொள்கைகளையும் கருத்துகளையும் பரப்புகின்ற, கொள்கை பரப்பு முயற்சியாக இருத்தல் வேண்டும். இதில் பார்ப்பனர்கள் தங்கள் கருத்துகளைப் பரப்புகின்ற அதே வழி வகைகளில் நம்முடைய இளைஞர்களும் தங்களின் கால்களைப் பதித்துக் கொள்வது நல்லது. தொடக்கத்தில் கொஞ்சம் எதிர்ப்புகளும், அடக்குமுறைகளும் எதிரிகளின் சூழ்ச்சிகளும் நம் நமபிக்கைகளைச் சீர்குலைக்குமபடி எதிரேறி வரத்தான் செய்யும். போகப் போக நமக்கு வலிவும் துணிவும் சரியான வழிமுறைகளும் தாமே வந்து அமையும். அதுவரை நாம் மனம் குலைந்து விடுதலோ, கொள்கை நெகிழ்ச்சி கொள்ளவோ கூடவே கூடாது.

'கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்'

என்பது திருக்குறள்.

போராட்ட முயற்சிகளில் சிறைக்குப் போதல் என்பதும் ஒரு படிநிலையாக இருக்கும். அந்நிலை வரும்பொழுது நாம் மனந்-தளர்ந்து விடுதல் கூடாது; அஞ்சி அடங்கி விடுதலும் இழுக்கு ஆகிவிடும். நாம் மக்களுக்காக இயங்குகிறோம் என்னும் கொள்கை நிலையே நமக்கு மிகுவான மனத்துணிவைத் தருவதாகும்.

சிறையிருத்தல் என்பது ஒருவகைக் குடும்பப் பிரிவே ஆகும், எனவே சிறை என்றவுடன் கொள்கையைத் தளர்த்திக் கொள்-ளும் நிலை, அல்லது கைவிட்டு விடும் நிலை என்பது, நம்மை நாமே வலுக் குறைத்துக் கொள்ளும் ஒரு செயலாகும்; நம் கொள்கையை நாமே இழிவுப்படுத்திக் கொள்ளும் ஒரு முனை மழுக்கமாகும். எவரோ நம்மில் சிலர் துணிந்து ஈடுபட்டால்தான் செயல்நிலை உருவாகும். செயலின்றி எந்தக் கொள்கையோ கோட்பாடோ வெற்றி பெறமுடியாது. வெறும் எழுத்துகளோ பேச்சுகளோ எதிரிகளைப் பணியவைத்து விடமுடியாது; செயல்கள்தாம் மாறுதல்களை உருவாக்க வல்லவை. எனவே இளைஞர்கள் போராட்டங்களுக்குரிய வகையில் எழுச்சி பெறுதல் வேண்டும்.

○

*மொழியியல் தொடர்: 2*

# மூளையின் செயற்பாடுகள்!

உலகில் வாழும் அனைத்து விலங்குகளிலும் தத்தம் கருத்தை வெளிப்படுத்துகின்றன என நாம் அறிவோம். மாந்தனோடு இணைந்து வாழும் விலங்குகளான நாய், ஆடு, மாடு, குதிரை, பூனை, கோழி, கிளி போன்றவை ஒலி வழியாகவும் செய்கைகள் வழியாகவும் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன. அதே போல் ஓரிரு ஒலி வழி கருத்துகளைப் புரிந்தும் கொள்கின்றன.

மேற் சொன்ன விலங்குகள் தம் வாழ்க்கை முழுவதும் ஒரு சில குறியீட்டு ஒலிகளை மட்டுமே கொண்டு வாழ்கின்றன. நாய் 'லொள்'...'லொள்' என்பது போன்ற சில ஒலிகளை மட்டுமே பயன்படுத்தி வாழ்க்கை முழுவதும் கருத்துகளை வெளிப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறது.

'டால்பின்' என்ற நீர்வாழ் விலங்குவகை மீன்தான் இதுவரை மாந்தனுக்கு அடுத்து பல்வேறு ஒலிகளைப் பயன்படுத்துவதாக கண்டறிந்துள்ளனர். டால்மின் முப்பத்திரண்டு வேறுபட்ட ஒலிகளை எழுப்பும் திறன் பெற்றுளளது. அவ்வொலிகளை முறைப்படுத்தி ஒவ்வொரு தனிக் கருத்திற்கும் ஒவ்வொரு ஒலியைப் பயன்படுத்தப் பழகிக் கொண்டுள்ளது.

பொதுவாக விலங்குகளின் கருத்து வெளிப்பாடுகள் ஓர் எல்லைக்குட்பட்டன. பாதுகாப்பு, உணவு, மகிழ்ச்சி, உடலுணர்ச்சி போன்ற சில காரணங்களுக்காகவே கருத்து வெளிப்பாடு செய்கின்றன.

இவற்றை மொழி என்று ஏற்றுக் கொள்ள முடியுமா? மொழி என்பது ஒலித் தொகுதியை முறையாகப் பயன்படுத்திக் கருத்து வெளிப்பாடு செய்யும் ஒரு கருவியாகப் பயன் படுத்த வேண்டும். அவ்வாறு மொழியை விலங்குகள் பயன்படுத்துகின்றனவா என்றால் இல்லை

மாந்த இனத்தின் முந்தைய வடிவமான குரங்கினங்கள் மொழி ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. பயிற்சி முறையில் அவற்றிற்கு மொழியை ஏற்படுத்திவிட முடியுமா என்று ஆராய்ச்சி செய்துள்ளனர். கெல்லக்சு என்பவர் தன் மகன் டொனல்டுடன் ஒரு பெண் குரங்கை சேர்த்துப்பழக்கினார். அவ்வாறு வளர்த்தபோது அக் குரங்கு விரைவாக அவர்களின் ஏவல்களை ஏற்றுச் செயற்பட்டது. எழுபதுக்கும் மேலான சொற்களை விளங்கிச் செயற்பட்டதே தவிர ஒரு சொல்லையேனும் ஒலி அமைத்துப் பேசவில்லை.

இதே போல் வேறோர் இடத்தில் ஒரு குரங்கிற்குப் பேசப் பயிற்சி கொடுத்தனர். மிகவும் கடுமையான முயற்சிக்குப்பின் அக்-

குரங்கால் சொல் போல் அமைந்த நான்கு ஒலித் தொகுதிகளை மட்டுமே உதிர்க்க முடிந்தது.

இதனால் பயிற்சியினால் எந்த மாற்றத்தையும் உருவாக்கி விலங்குகளுக்கு மொழியைப் பயிற்றுவிக்க முடியவில்லை. எனவே, உடலியல் வகையிலேயே மாந்தன் விலங்குகளிலிருந்து வேறுபட்டிருப்பதை ஆராய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உயிரினங்களின் அறிவைப் பொதுவாக இயல்பூக்க அறிவு, பேற்றறிவு என இரு வகையாகப் பிரிக்கலாம்.

இயல்பூக்க அறிவு என்பது பிறப்பிலேயே அமையப் பெற்ற அறிவு ஆகும். ஒரு பூனை எந்தப் பூனையையும் பார்த்து பயிற்சி எடுத்துக்கொண்டு மரத்தில் ஏறுவதில்லை. மரத்தினின்று கீழே அடிபடாமல் தாவுகிறது. அதற்குப்பயிற்சி எடுத்துக்கொள்வதில்லை. அதன் மூளை அமைப்பிலேயே தாவுவதற்கும் மரமேறுவதற்குமான பயிற்சி பொதியப் பெற்றுள்ளது. நாயை அவ்வாறு மரமேறப் பயிற்றுவிக்க முடியாது, நாய்க்கு அவ்வாறு மூளையின் அமைப்பு இல்லை. இவ்வாறு பிறப்பிலேயே அமைந்திருக்கும் அமைப்பு அறிவே இயல்பூக்க அறிவாகும்.

மாந்தன் பிறப்பிலேயே மரமேறும் அறிவைப் பெற்றவனில்லை. ஆனால் பயிற்சியினால் அவ்வறிவைப் பெற்றுக் கொள்கிறான்.

எனவே இயல்பூக்க அறிவு மிக்க விலங்குகளுக்குப் பிறப்பிலேயே அறிவு பெறும் அளவில் மூளை மிகுதியாக வளர்ச்சிபெற்றிருக்கும். மாந்தன் வளர வளரத்தான அறிவு பெறுகிறான். எனவே பிறப்பில் குறைவான மூளை வளர்ச்சியே பெற்றுள்ளான். எனவேதான் சிம்பன்சி எனப்படும் குரங்கு பிறக்கும்போதே மூளை வளர்ச்சியில் 60 விழுக்காட்டைப் பெற்றுள்ளது. மீதி 40 விழுக்காட்டு மூளையைத் தன அறிவு வளர்ச்சியோடு பெறுகிறது. மாந்தன் குழந்தையில் 24 விழுக்காட்டு மூளையும், வளர்ச்சியில் 76 விழுக்காடும் பெற்று வளர்கிறான்.

இது பிறக்கும்போது இயல்பூக்க அறிவையும் வளரும்போது பெறும் பேற்றறிவையும் குறிக்கிறது. மாந்தன் பேற்றறிவு 76 விழுக்காடு பெற்றுள்ளான்.

ஒரு சிறிய எடுத்துக்காட்டின் வழி இதனை விளக்கலாம். மாடு கன்றை ஈன்ற உடன் அதன் கன்று ஒரு சில மணி நேரங்களில் துள்ளி விளையாடுகிறது, ஓடுகிறது. ஆனால் மாந்தனோ பிறந்தவுடன் நடக்கக் கூடத் தெரியாமல் படுத்துக் கிடந்து பத்து மாதங்களுக்குப் பின்தான் நடக்கிறான்; ஓடுகிறான.

இதன் வழி விலங்குகள் தனக்கு அமைந்த பெரிய அளவு இயல்பூக்க அறிவையும் குறைந்த அளவு பேற்றறிவையும் தம்

வாழ்க்கைக்கும் பயன்படுத்துகிறது.மாந்தன் குறைவான இயல்பூக்க அறிவையும் தன் பயன்படுத்தத்திற்குத் தக பேற்றறிவு(Accuquired Knowledge) பெற்று அதன் பின் பயன்படுத்துகின்றான்.

மொழி என்பது மாந்தனின் பேற்றறிவால் விளைந்தது. தன் இன வழியால் பெற்றுக் கொண்ட சொத்து போன்றது. தொடக்கக் கால மாந்தன் பேசித் திரியவில்லை. அவனுக்கு மொழியும் இல்லை. பல்வேறு ஒலி ஏற்ற இறக்கங்களை எழுப்பவல்ல குரல் அமைப்புப் பெற்றவனாக இருந்தான். அவற்றை நாளடைவில்தான் பயனபடுத்தத் தொடங்கினான்.

ஒலி ஏற்ற இறக்கங்களைப் பயன்படுத்த மாந்தன் அமைப்பு இருந்தது என்றால் இரண்டு உறுப்பு அமைப்புகளை நாம் கவனிக்க வேண்டும். ஒன்று ஒலி எழுப்பு வல்ல குரல் மற்றும் வாயுறுப்புகள். மற்றொன்று அக்குரலை மாற்றி எழுப்புவதற்கு ஏவம் கொடுக்கும் மூளை அமைப்பு.

இந்த இரு உறுப்பு அமைப்புகளாலும் மாந்தன் விலங்குகளினின்று வேறுபட்டுள்ளான் என்பதை நாம் அறிகிறோம். குரங்கிற்கு பல்வேறு ஒலி எழுப்புவல்ல வாயமைப்பும் இல்லை. மொழிக்காக ஒலி ஏற்றத்தை உருவாக்கவல்ல மூளையமைப்பும் இல்லை என்பது தெரிகிறது. எனவேதான் விலங்குகள் மொழியைப் பயன்படுத்தவில்லை நாம பயிற்சி கொடுக்கவும் முடியவில்லை.

மாந்தனுக்கு மூளை அமைப்பில் மொழிக்கான சிறப்பு அமைப்பு ஒன்று இருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். அடுத்து மொழிக்குத் தக மாந்தனின் மூளை அமைப்பு எவ்வாறுள்ளது என்பதைப் பார்ப்போம். (தொடரும்)

## செய்திகளைக் கேளுங்கள்....

தமிழ்த் தம்பிகளே...

இன்றைய அறிவியல் வளர்ச்சி நம் அறிவை வளர்க்காமல் சலவையே செய்கிறது.

அறிவியலால் வளர்ந்த தொலைக்காட்சியில் எந்நேரமும் திரைப்படப் பாட்டும், கூத்துமாய் உள்ளது.

நாட்டு நடப்புகளை அறிவியல் செய்திகளைக்கூட கேட்க விடாமல் மறு பரப்பலில் திரைப்படமே காட்டப் பெறுகிறது.

இவற்றில் அறிவு மயங்காமல் ஒவ்வொரு நாளும் செய்திகளைக் கேட்பதும், படிப்பதுமாக நம் முயலவேண்டும்.

சுவடி ஒன்றை எடுத்துக் கொண்டு,ஒவ்வொரு நாளும் நாம் அறிகிற முகாமைச் செய்திகளைத் தொகுத்துக் கொண்டு, வரவேண்டும்.

ஒவ்வொரு மாதமும் தொகுத்த செய்திகளை மீள் பார்வை செய்தல் வேண்டும். அதுவே நம்மை, நாட்டை நமக்கு விளங்க வைக்கும் O

# மானம்

அதியமான்.

மாந்தர் தம் வாழ்நாள் முழுவதிலும் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை ஒப்புரவுச் செய்து ஈட்டும் புகழுக்கு இழுக்குவராமல் காப்பதைத்தான் மானம் எனக் கூறுகிறோம்.

மானம் ஒழுக்கத்தாலும். புகழாலும் நிலைபெறுகிறது. அதனாலேயே பேராசான் வள்ளுவர்.

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார். மேலும்

*சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரோடு*
*பேராண்மை வேண்டு பவர்* (குறள் 962)

புகழோடு மானமும் வேண்டுபவர், அவர் புகழோடு வாழும் போது இழுக்குவரச் செயல்களைச் செய்தல் தவறுஎனக் கூறுகிறார்.

ஒழுக்கங்கெட, புகழுக்கு இழுக்கு வரும்; புகழுக்கு இழுக்கு வந்தால், மானம் போய்விடும். பின் வாழாமை நல்லது என்பதே தமிழ் நெறி.

குமுகாயப் பார்வையுடைய ஆன்றோர்கள் மாந்தர்க்கான வாழ்க்கை நெறிகளை வகுத்துள்ளபடி மானத்தைக் காக்க நடத்தல் வேண்டும். மாந்தர் தம் வாழ்க்கைப் பாதையில் சில இடர்கள் வரலாம். அதாவது தோல்விகள் ஏற்படலாம். அவற்றைச் சீராக்கச் சோம்பலின்றி முயற்சியால் இழந்த மானத்தை ஈட்ட முடியும். அதனாலேயே "முயற்சி திருவினையாக்கும்" என்பர் நம் சான்றோர்.

உயிரை விடும் நிலைக்கு மான இழத்தலைச் செயல்படுத்தி விட்டாலொழிய உயிர் நீத்தல் தேவையில்லை. ஒருவன் செய்த தீச் செயலால் இனிக் குமுகாயத்தில் தலைகாட்டி நடக்க இயலாதென்ற ஒரு நிலை ஏற்பட்டால் அவன் வாழ்ந்து பயனில்லை. அவனே உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் கூட இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் செத்தவர்களே. சில தீச் செயல்களை அல்லது இழி செயல்களைச் செய்தவர்கள் எவ்வளவு முயன்றாலும் தமக்கு ஏற்பட்ட பழியால், தாம், இழந்த மானத்தை மீட்கமுடியாது; அவர்கள் வாழ்தல் கூடவே கூடாது.

மானத்தை அடிப்படையாக வைத்துச் சில கட்டுதிட்டங்களைச் சட்டமாகப் பேசிவருகின்றனர். இந்த இறுக்கத்தால், இன்னும் சொல்வதானால் கொடுமைகளால் மிகுதியாகப் பெண்களே தாக்கமுறுகின்றனர். "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்" என ஒரு கூட்டம் பேசித்திரிகின்றது. இது வாழ்க்கைக்குப் பொருத்த மற்ற பழமொழி.

ஒரு பெண் திருமணமானபின் அவனோடுதான் வாழ வேண்டும். ஆணும் அப்படியே வாழ வேண்டும். உடல் நலம், குமுகாயப் பார்வை போன்றவை அறிவியல் பார்வையாக இருந்தால் அது சரியே. ஆனால் ஒரு பெண் ஒருவனைத் திருமணஞ் செய்தாள். கணவன் பெருங்குடிகாரன். எப்போதும் அவளைத் துன்புறுத்துகிறான். ஒரு நிமயத்தை அவனோடு கழித்தல் 100 ஆண்டுகள் கழித்தற்கு ஒப்பாகும். எனவே அவனை விட்டு அவள் மணவிலக்குப் பெற்று வேறொருவனைத் திருமணஞ் செய்து கொள்கிறாள். அவன் ஒரு பெரும் நோயாளியாகி விட்டான். அவனால் இயங்க முடியாது. குடும்பத்திற்குத் தேவையான செல்வத்தை ஈட்ட அவனால் முடியவில்லை. மனைவியோடு வாழத் தகுதியற்றவன். அப் பெண் அவனை விட்டு நீங்கிப் பல நாள்கள் கழித்து இன்னொருவனைத் திருமணஞ் செய்து வாழ்கிறாள். அவன் எல்லா வகையிலும திறமையானவன். அவனோடு வாழ்ந்து பிள்ளைகளைப் பெற்றுச் சிறப்பான குடும்பம் எனப் பெயர் எடுக்க வாழ்ந்து காட்டினாள். இவளை மானமிழந்தவள் என எண்ணல் தவறு. ஏனென்றால் இதே போல ஆண்களும் செயல்பட்டு வாழ்வதைக் காண்கிறோம். அவனை மானம் இழந்தவனென இந்நாள் வரை யாரும் கூறிலர்.

ஆகவே இவ்வகையான சமயங்களில் மானம் இழந்தவர் எனக் கூற முடியாது. எப்படியோ முயன்று ஆண் பெண் இருவரும் தங்களுடைய வாழ்க்கையைச் செப்பமாக அமைத்துக் கொண்டால் அதையே மானங்காக்க எடுத்துக் கொண்ட முயற்சி எனக் கொள்ளல் வேண்டும். மானமுள்ள குடும்பம் என்றே கொள்ளல் வேண்டும்.

ஒரு மாணவன் ஓரிரு வகுப்புகளில் தோல்வி அடைந்து பின் முயற்சியால் நன்றாகத் தேர்ச்சி பெற்று மிகச் சிறந்த பணியில் அமர்ந்து புகழ் பெறுவதும், மேலே கூறப்பட்ட பெண்ணின் முயற்சியும் ஒன்றே. தோல்வி கண்டு தொய்ந்திடாமல் முயற்சியால் மானங்காத்தலே சிறப்பு.

ஒழுக்கம், புகழ், மானம் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவற்றில் யாதாவது ஒன்றுக்கு இழுக்குவரினும் மானம் போய் விடும்.

எனவே எவ்வகை நோக்கத்திற்கும் அல்லது ஈட்டலுக்காகவும் மானத்தை விட்டு விடாமல் மாந்தர் வாழ வேண்டும். O

---

**அன்பர்கள் கவனிக்க!**

**ஐயா அவர்களின் வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்றுக் கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். —அமைச்சர்.**

# குழந்தை இலக்கியம்

—பறம்பை அறிவன்.

குழந்தை—மழலை இவை இலக்கியம்தான். ஆயினும், குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டும் இலக்கியப் படைப்பாளிகள், 'குழந்தைகளை' நடுவமாகக் கொள்வது மிகக் குறைவு.

ஆனால், அரசியல், கட்சி, அரசு சார்ந்த சிந்தனைகளை—கருத்தியல்களைக் குழந்தைகளிடம் திணிப்பதையே இலக்கியமாகக் கருதுகிறார்கள்!

சிந்திக்கும் முறையையும் திறனையும் வளர்க்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது என்று கூறுவது வெற்றுப் பேச்சே! அத்தகைய படைப்புகளைப் புறக்கணிப்பதே நடப்பாகவுள்ளது.

***அறிவை வழங்குவது வேறு—திணிப்பதென்பது வேறு.***

இயல்பான வளர்ச்சியைக் குழந்தைகளிடம் காண்பதும், பாராட்டுவதும் வேண்டும். அதனடிப்படையிலேயே செயலூக்கம் பெறும்படியான கருத்துகளை வழங்குதல் வேண்டும்.

தாகூர் கூறியவாறு, புதுத் துணிமணிகளை அணிந்து, குழந்தைகளை ஆடாதே, பாடாதே, அங்கே போகாதே புழுதியில் புரளாதே என்று—'துணிமணி அழுக்காகுமே' என்று கவலைப் படுகிற பெற்றோர்—பெரியவர்களையே பார்க்கிறோம். குழந்தையின் இயல்பு—உள்ளம் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை.

'கூடி வாழ்ந்திடு'—என்று 'பாவலர் ***மு.கோவிந்தராசன்***' எழுதிய பாடல் முதல் வகுப்புப் பாட நூலில் உள்ளது—

அரசு வெளியிட்டுள்ள இப் பாடநூலில் 'இப்படி ஒரு பாடல் தேவை' தான்! குழந்தையை விட, அரசின் ஆட்சி அதிகாரப் பாதுகாப்பே உள்ளடக்கமாகச் செயல்படுகிறது பாடல்! குழந்தை இலக்கியம் அதன் இயல்பூக்கங்களை வளர்த்தெடுப்பதாக இருத்தல் வேண்டும். அதனை அடக்க—ஒடுக்க—புறக்கணிக்கச் செய்யும் கருத்தியல்களைக் குழந்தை நூல்களில் பரப்புதல் கூடாது!

"குட்டிப் பாப்பா! குட்டிப் பாப்பா
குறும்பு பண்ணாதே!"

—இயற்கைப் பாவலன் **வோர்ட்சுவர்த்து**—சொல்லேர் உழவன்—அவன் கூறுகிறான், "குழந்தை; மாந்தனின் தந்தை" (Child is the father of the man) என! ஆனால், பாவலர் கோவிந்தராசனின், சிந்தனை'யின் வெளிப்பாடாகக் குழந்தையைக் 'குட்டிப் பாப்பாவாகக்' காண்கிறார்., 'குட்டி' என்ற 'சிறுமை'யுணர்வாலேயே, குழந்தையைக் 'குறும்பு பண்ணாதே'என்கிறார்—'குறும்பு'—குழந்தையின்' 'இயல்பு' பற்றி மதிப்பிடும் தவறான சொல்லாக்கம்! அடுத்து, பாவலரின் '**அடி**,'தடி தூக்குகிறது: "நீயும்
***கொட்டிக் கிடக்கும் மண்ணின் மீதே குதித்து ஆடாதே!"***

இப்பாவலர், காவல் துறைக்குப் போனால், காவல் நிலையத்தைக்

கொடுந்தண்டனைக் கூடமாக மாற்றி 'முதல்வரின் முதல் பரிசைப் பெற்றுப் பதவியுயர்வும் வாங்கி விடுவார்!

குழந்தையின் 'மழலை' குழலினும், யாழினும் இனியதென்பர்—இவர்க்கு, வெட்டிப் பேச்சாக, வீண் வம்பாகத் தெரிகிறது. அதனுலேயே, தவருன 'குமுகாய வளர்ச்சி'யின் வீணுன நிலைமைகளைக் கண்டு கொதிப்பது பாவலரின். உரிமை ஆனுல், அதனைக் குழந்தைகளிடம் சொல்லிக் குழப்புவதேன்?

ஒரு முறை,விஞேபா அடிகள் பேசும் போது,'மழலைகளின் பேச்சு, செயல்களில் ஒரு தொடர்ச்சியுள்ளது, நுணுக்கமான அதன சிந்தனையைப் புரிந்து கொள்ள வேண்டும்'என்ருர். தாய் என்னும் பல்கலைக்கழகம் கூட இதில தோல்வி காண்பதை நாம் காண்கிரும்! மழலையின்—குழந்தையின் பேச்சு பொருளற்றதன்று; வெட்டிப் பேச்சும் ஆகாது; வீண் மொழியும் இல்லை!

குழந்தையின் ஊடாகப் 'பெரியவர்களுக்கு' அறிவு சொல்வதாக இப்பாடலைக் கருதல் இயலாது. பாரதி பாடலில்,

**''மோதி மிதித்து விடு; முகத்தில் உமிழ்ந்து விடு''** என்கிற போது, குழந்தையின் மிதியையும், எச்சில் உமிழ்வையும் அழகாக வளர்த்துயர்த்திக் கூறும் பண்பு, அனைவர்க்கும் அறிவுணர்ச்சியூட்ட வல்லது!

குழந்தையின் இயல்பூக்கங்களைத் 'தடை' செய்து விட்டு,

**'—எதற்கும்**
**தட்டிக் கேட்கும் துணிவு வேண்டும் தயங்கி நிற்காதே'**

என்பது, பாவலரின் 'வெற்றெனத் தொடுக்கும்' இயலாமையைக் காட்டுகிறது!

முடிவாகப் பாடல்:

**நாடும் வீடும் நன்ருய் வாழ**
**நாளும் உழைத்திடு—நீயும்**
**கூடி வாழும் கொள்கையுள்ளம்**
**கொண்டே வாழ்ந்திடு''**

என்கிறது. குழந்தைக்கான கருத்துகளோ, உண்மைகளோ இன்றி, 'நாட்டின் ஒற்றுமை' என்ற 'ஒருமைப் பாட்டை'த் திணித்துவிட்ட பெருமிதம் பாவலர்க்கும், இப்பாடலைப் பாடநூலில் சேர்த்த பெருமிதம் பாட நூற் குழுவிற்கும் கிடைத்திருக்கலாம்!

குழந்தைக் கென்று இதில் ஏதுமில்லை. குழந்தைகள் 'கூடி வாழ்வதும்' இயங்குவதும் காணத் தகுந்த பண்பு அவற்றைத் தடுத்தும்—விலக்கியும்—'வெறுக்கவும்' 'அச்சப்படவும்' செய்து விட்ட நம் தவறுகள், படைப்புகளிலும் தொடர்வது கூடாது.

இத்தகைய பாடல்களைப் பாடநூல்களிலிருந்து 'எடுப்ப'தோடு, குழந்தைகள் பாடல்களைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்தி இளைய தலைமுறையைக் காப்பாற்ற வேண்டும்! O

# உன்னால் முடியும்!

பாவலர். இளஞ்சித்திரன்

உன்னால் முடியும் தம்பி,—நீ
உடனெழ வேண்டும் நம்பி! (உன்னால்)

பின்னால் பார்ப்போம் என்பது தீது! ஒரு
பேச்சுக்கும் கூட அதுவுத வாது! (உன்னால்)

முன்னால் உள்ளஉன் கடமை பெரிது!
முணுமுணுக் காததை முடிக்கப் பழகு!
தன்னால் எதுவும் நடந்திடும் என்று
தவறாக நினைப்பதை விடுவது நன்று! (உன்னால்)

முயற்சி என்றும் உயரிய மருந்து!
முதன்மை யாய்அதை விரும்பி அருந்து!
அயர்ச்சி எனும்ஒரு நோய்உனை விரைந்து
அகன்றிடும்; விளங்கு வாய்நீ சிறந்து!
(உன்னால்)

காலம் அரியது: அதைநீ போற்று!
கருதிய படிஉன் கடமை ஆற்று!
காலம் தவறின் எல்லாம் தவறும்;
கைகளை உயர்த்துனைப் போற்றுவார் எவரும்!
(உன்னால்)

இடம்கண் டெதையும் தொடங்கல் வேண்டும்!
எளியது தானெனச் செயலும் யாண்டும்!
மடம்கொண் டிருந்தால் கடிதாய்த் தோன்றும்!
மடிதற் றெழுந்தால் வெற்றிஎஞ் ஞான்றும்!
(உன்னால்)

முடியா தென்றிங் கெதுவும் இல்லை!
முனைந்து செயல்படின் முடியும் நல்லை!
விடியாப் பொழுதும் விடியும் தானே!
விளங்கும் வழி;வரும் வெளிச்சமும் தானே!
(உன்னால்)

தடைஎன் றுனக்கிங் கெதுவும் இல்லை!
தாழ்வு மனப்பான் மைதான் தொல்லை!
தடைஎன் றிருக்கும் அதைமுதல் அகற்று!
தன்னிலை ஆற்றலை நீவெளிப் படுத்து!
(உன்னால்)

உனக்கே தெரியா துனக்குள ஆற்றல்;
உன்வினை யான்மைத் திறத்தைப் போற்றல்!
உனக்குப் புரியா துன்பயன் பாடு!
உன்னை உணர்ந்துன் அறிவை நாடு! (உன்னால்)

# சின்ன நாடுகள் சிறப்பாக வாழ்கின்றன!

சிறிய நாடுகளில் தான் வசதியாக வாழ்கிறார்கள். வாழ்க்கைத் தரம் உயர்வாக உள்ளது. கை நிறைய ஈட்டுகிறார்கள். வயிறு நிறைகிறது வகை வகையான உடை, வீடு, மகிழுந்து என்று மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

உலக நாடுகள் (ஐ நா.) ஒன்றியம் தயாரித்த ஒரு புள்ளி விளத்தத்திலிருந்து இது தெரிய வருகிறது. சென்ற கிழமை இவ் விளத்தம் வெளியிடப்பட்டது. பெரிய நாடுகளில் மக்கள் பஞ்சம் பட்டினியுடன் போராடுவதும் இந்த அறிக்கையில் தெரிய வருகிறது.

இவ் வொன்றியத்தில் இப்பொழுது 173 உறுப்பு நாடுகள் உள்ளன. இந்த நாடுகளின் மக்கள் வாழ்க்கைத்தரம் என்ன? வசதியாக வாழ்கிறார்களா? எந்த அளவுக்கு? இதைத் தெரிந்துகொள்ள ஓர் அறிக்கை வரைவு செய்யப்பட்டது.

இப்பட்டியலில் இந்தியாவுக்கு 13?-ஆம் இடம். இங்குள்ள மக்கள் அந்த அளவுக்கு வறுமையில் வாடுகிறார்கள். உலகின் மிகப் பெரிய நாடு சீனா, இதற்கு 101-ஆம் இடம்.

தென் அமெரிக்காவுக்கு அருகில் பார்பதோசு என்ற சிறிய நாடு இருக்கிறது. இந்நாடு இப்பட்டியலில் 20-ஆம் இடத்தில் இருக்கிறது. இது ஒரு சிறிய தீவு. பரப்பளவு 330 ச.கி.மீ. மக்கள் தொகை 2 இலக்கத்துக்கு 60 ஆயிரம். சராசரி தனி ஆள் ஆண்டு வருவாய் ஒன்றரை இலக்கம் உருபா. ஆங்காங் தீவு இப்பட்டியலில் 24-ஆம் இடம், சைப்ரசு தீவு 27-ஆம இடம், உருகுவே 30-ஆம் இடம் திரினிதாத் தேபகா நாடுகள் 31-ஆம் இடம். பாவாசு 32-ஆம்-இடம் கொரியா குடியரசு 33-ஆம் இடம், சிலி 36-ஆம் இடம் கோஸ்டாரிகா 42-ஆம் இடம், சிங்கப்பூர் 43-ஆம்இடம்.

சிங்கப்பூர் பரப்பு 616 ச.மீ.
மக்கள் தொகை 27 இலக்கம்.
தனி ஆள் சராசரி வருவாய் 4 இலக்கம் உருபா.

இப்பட்டியலில் முதலிடம் சப்பானுக்கு. அடுத்து கனடா, நார்வே, சுவிட்சர்லாந்து, சுவிடன் எல்லாம் சிறு நாடுகள். பணக்கார நாடெனப்படும் அமெரிக்காவுக்கு 6-ஆம் இடம்.

சப்பானில் தனி ஆள் வருவாய் 9 இலக்கம் உருபா
மாதம 75,000 உருபா
நாள் ஒன்றுக்கு 2,500 உருபா. ○

---

*அறிவின் மிக்க ஆண்மை இல்லை!*
*அதன்வழித் தடத்தில் செல்லுக ஒல்லை!*
*முறிவில் லாநெல் வினையும் மேலாய்*
*முடியும்;என் சொல்லைக் கருத்துடன் கேளாய்! (உ*

# உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

## 6 மாரிட்டானியா - (MAURITANIA) — குடியரசு.

நிலப்பரப்பு : 10,30,700 ச.அ.மா
மக்.தொ. : 18,30,000
மக்.தொ.பெ. : 2 8%
மக்.வா எ. : ஆண் : 41, பெண் : 44 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 17%
தலைநகர் : நவுக்சோட்
மொழி : பிரெஞ்சு, அரபிக்
நாணயம் : ஓகையா = 5 கோஉம்

## 7 லிப்யா — (LIBYA)

நிலப்பரப்பு : 17,59,540 ச.அ.மா
மக்.தொ. : 35.00,000
மக்.தொ.பெ. : 4 1%
மக்.வா.எ. : ஆண்: 54, பெண்: 57 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 40%
தலைநகர் : டிரிபோலி
மொழி : அரபிக்
நாணயம் : லிப்யன் டிஞர் = 1000 டிர்ஹாம்

## 8. எகிப்து — EGYPT — (குடியரசு)

நிலப்பரப்பு : 10,01.449 ச.அ.மா
மக்.தொ. : 46,00,0000
மக்.தொ.பெ. : 2.6%
மக்.வா.எ. : ஆண்: 54, பெண்: 56 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 40%
தலைநகர் : அல் கெய்ரோ
மொழி : அரபிக்
நாணயம் : எகிப்தின் பவுண்ட் = 100 பியாஸ்டிரஸ்

## 9. தி கெம்பியா — THE GAMBIA — (குடியரசு)

நிலப்பரப்பு : 11,295 ச.அ.மா.
மக்.தொ. : 70,0000
மக்.தொ.பெ : 2.8%
மக்.வா.எ. : ஆண்: 39. பெண்: 43 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 12%
தலைநகர் : பான்சுல்
மொழி : ஆங்கிலம், மன்டின்கா
நாணயம் : தலாசி = பட்டுட்ஸ்

## 10. இனியா பிசாவ்—(GUINEA BISSAU)

நிலப்பரப்பு : 3,61,25 ச.அ.மா.
மக்.தொ. : 8,30,000
மக்.தொ.பெ.: 1.7%
மக்.வா.எ. : ஆண்: 39, பெண்: 43 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 9%
தலைநகர் : பிசாவ்
மொழி : போர்ச்சுகீசு, கிரியாலோ
நாணயம் : இனியா பிசாவ் பீஸோ = 100சென்டோவாஸ்

## 11. இனியா—(GUINEA)—குடியரசு

நிலப்பரப்பு : 24,58,57 ச.அ.மா
மக்.தொ. : 54, 10,000
மக்.தொ.பெ : 2.5%
மக்.வா.எ. : ஆண்:42, பெண்: 45(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 48%
தலைநகர் : கோனக்ரி
மொழி : பிரெஞ்சு
நாணயம் : சிலி = 100.

## 12, மாலி—(MALI) குடியரசு

நிலப்பரப்பு : 12,40,142 ச.அ.மா
மக்.தொ. : 77,20,000
மக்.தொ.பெ.: 2.7%
மக்.வா.எ. : ஆண்: 44, பெண்: 44(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 10%
தலைநகர் : பமாகோ
மொழி : பிரெஞ்சு, பம்பாரா
நாணயம் : மாலி பிராங் = செண்டிம்ஸ்

## 13, பர்கினு—(BURKINA)குடியரசு.

நிலப்பரப்பு : 2,74,122 ச.அ.மா
மக்.தொ. : 67,00,000
மக்.தொ.பெ: 2.6%
மக்.வா.பெ- : ஆண்: 42 பெண்: 45(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 7%
தலைநகர் : உவாகடோ
மொழி : பிரெஞ்சு, சுடானிக்
நாணயம் : CFA - பிராக்—100 செண்டிம்ஸ்.

(தொடரும்

# உலகத்துடன் மோத வரும் வால் விண்மீன்!

விண் வெளியில் ஆயிரக்கணக்கான வால் விண்மீன்கள் (காமெட்) உலா வருகின்றன. வால்விண்மீன் என்பது பனிக்கட்டிகளும் பாறைகளும் சேர்ந்த தூசுப் படலம் ஆகும். அது கதிரவனை நெருங்கி வலம் வரும்போது வால் வடிவத்தில் வளிகளை வெளிவிடுகிறது. இந்த வால்விண்மீன்களில் சில நம் உலகின் பக்கம் மின்னல் வேகத்தில் வந்துவிட்டுச் செல்வதுண்டு.

அமெரிக்க விண்வெளி ஆய்வாளர் லூயிஸ் ஸ்விப்ட் என்பவர் 1862 சூலை 16-இல் ஒரு வால்விண்மீனைக் கண்டறிந்தார். இதற்கு 3 நாள் கழித்து ஆர்வர்டு பல்கலைக் கழக ஆய்வாளர் கொரெஸ் டட்டில் என்பவரும் இதைக் கண்டறிந்து மேலும் சில புதிய செய்திகளை வெளியிட்டார். அந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் இது மிகவும் ஒளிர்ந்தது. 1862-இன் பெரிய வால்விண்மீன் என்ற வகையில் ஸ்விப்ட்டட்டில் என்று இதற்குப் பெயரிடப்பட்டது.

அந்த வால்விண்மீன் 130 ஆண்டுகள் கழித்து இப்போது நம் உலகின் அருகில் வந்திருக்கிறது. இப்போதைய வருகையினால் உலகுக்கு கேடு ஏதும் இல்லை. மீண்டும் 134 ஆண்டுகள் கழித்து அதாவது தி.பி. உகருஎ-இல் (கி.பி. 2125) இது உலகுக்கு இன்னும் மிக அருகில் வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அப்போதும் தீங்கு ஏதும் நேராது என்று சில அறிவியலார் உறுதியாகச் சொல்கின்றனர். வேறு சில ஆய்வாளர்கள் உலகத்துடன் மோதி ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று கருதுகின்றனர்.

நொடிக்கு 37 கல் வேகத்தில் பயணம் செய்யும் பந்து போன்ற இந்த வால்விண்மீன் உலகின் மீது மோதும்போது பல்லாயிரக் கணக்கான அணுகுண்டுகளை ஒரே இடத்தில் வைத்து வெடிக்கச் செய்தால் ஏற்படுகின்ற விளைவுகள் போன்ற ஒரு கடும் நிலை ஏற்படும் என்கின்றனர் ஆய்வாளர்கள். இது மோதி வெடிப்பதனால் உண்டாகும் தூசு கதிரவன் ஒளியை மறைத்து வெப்பநிலையில் மாறுதலை ஏற்படுத்தி உயிர்களை அழிக்கும் நிலை கூட ஏற்படலாம் என்கின்றனர் அவர்கள்.

இது உலகத்துடன் மோதுமா மோதாதா என்று ஒரு ஐயத்திற்கு இடமான உறுதியற்ற நிலை உள்ளது ஏனெனில் கதிரவனை நெருங்குகையில் இதன் வேகம் அதிகமாகி பாதை மாறக் கூடிய வாய்ப்பு உள்ளது. அடுத்த முறை உலகிற்கு அருகில் வரும்பொழுது அதை எப்படி எதிர்கொள்வது என்று விண்வெளி அறிஞர்கள் இப்பொழுதிலிருந்தே ஆய்வு செய்யத் தொடங்கி விட்டனர் ஒரு வேளை அது மோத வருமானால் இங்கிருந்து விண்கலங்களை (நியுக்ளியர் ராகெட்) ஏவி அதன் திசையைத் திருப்ப முடியுமா என்றும் ஆய்வு மேற்கொண்டுள்ளனர் தமிழ் நாட்டிலுள்ள ஆய்வாளர்கள் இது உலகத்தின் மீது வந்து மோதும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்றும் அப்படியே உலகிற்கு அருகில் இது வந்தாலும் உலகின் ஈர்ப்பு விசையால் அதன் திசை மாறக்கூடும் என்றும் கருதுகின்றனர். O

# உங்களுக்குத் தெரியுமா?

O நமது குருதியிலும் சிறுநீரிலும்.

| | | |
|---|---|---|
| "யூரிக் அமிலம்" | 3.6 | மி.கி% |
| யூரியா | 20 | ,,% |
| ஆல்புமின் | 3.4 | ,,% |
| பொட்டாசியம் | 4.7 | ,,% |
| கால்சியம் | 4.5 | ,,% |

என்ற அளவுகளில் இருக்க வேண்டும்.

இவற்றின் அளவு ஆளுக்கு ஆள் உடல்நிலை உடல் எடை, பாலினம், நோய் நிலை ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்.

O வடகிழக்கே உள்ள ஒரிசாவில் ஓடும் பெரிய ஆறின் (மகாநதியின்) நீர் 94% கடலில் விழுகிறது.

O ஆந்திராவில் கிருட்டிணா, கோதாவரி, பெண்ணாறு ஆகிய மூன்று ஆறுகளிலும் 50% கடலில் சேர்ந்து விடுகிறது.

கேரளாவில் 43 ஆறுகள் அரபிக் கடலில் கலந்து விடுகின்றன.

O தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் முகாமையான உழவு விளை பொருள்கள் அரிசி, சீனி, பதப்படுத்திய உணவுவகைகள், பதப்படுத்திய இறைச்சி, மீன் வகைகள், காய்கறிகள், பழங்கள், முந்திரி, ஏலம் போன்ற மண (வாசனை)ப் பொருள்கள், குளம்பிக்கொட்டை, தேயிலை, பருத்தி முதலியன.

O தமிழில் பாலி, சமற்கிறத மொழிகள் கலந்து சிங்கள மொழி உருவானது.

கி.மு.580-இல் இன்றைய துருக்கியின் பகுதியான லிடியரு மன்னனுக்கும் இன்றைய ஈரானின பகுதியான மெடியா மன்னனுக்கும் நாட்டு எல்லை குறித்து 5 ஆண்டுகளாக போர் நடந்து வந்தது. 6-ஆம் ஆண்டு போரின்போது முழுக் கதிரவன் மறைவு, ஏற்பட்டதால் பகலிலேயே இருள் ஏற்பட்டது. இது கடவுளின் சாவம் என்று அஞ்சி இரு மன்னர்களும் போரை நிறுத்தி உடன்பாடு செய்து கொண்டனர்.

O தம் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் ஐயா ஏழு மாதங்கள் 'தடா' சிறையில் வைக்கப்பட்டிருந்தார். இதுவரை 8 தடவை சிறை சென்றுள்ளார்.

இப்போது மியான்மர் எனப்படும் பர்மாவில் 'நோபல்' பரிசு பெற்ற அறிஞர் சூகியி என்பவர் 1989 முதல் சிறையிலிருக்கிறார்.

O உலக மக்களில் 25% மக்களுக்குச் சோற்றுக்கு வழியில்லாத வறுமையின் கொடுமையில் உள்ளதாக ஐ.நா. அமைப்பு நடத்தியுள்ள ஒரு கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

O கழிவுப் பொருள்களால் பொருள் ஈட்டும் தொழிற்சாலை கரும்பாலைதான். சர்க்கரைப் பாகிலிருந்து கிடைக்கும் கழிவுப்பொருள் 'மொலசஸ்'. இப்பொருள் மது முதல் வேதியியல் பொருள்கள் வரை உருவாக்க மூலப் பொருளாகப் பயன்படுகிறது.

O மே மாதம் 31-ஆம் நாள் உலகப் புகையிலை மறுப்பு நாளாக கடைபிடிக்கப் படுகிறது.

O

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)